நாணயச் சபை

இலங்கை மத்திய வங்கி

2021 ஒத்தோபர் 06 | சுற்றறிக்கை | 2021இன் 09ஆம் இலக்கம்

## கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான சலுகைகளை நீடித்தல்

இலங்கையில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலினால் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை நீடிக்குமாறு தொடர்பான தரப்பினர்களிடமிருந்தும் அரச அதிகாரிகளிடமிருந்தும் இலங்கை மத்திய வங்கி அநேக கோரிக்கைகளைப் பெற்றிருக்கிறது. இதற்கமைய, வியாபாரங்களினாலும் தனிப்பட்டவர்களினாலும் எதிர்நோக்கப்பட்ட சவால்களை ஈடுசெய்யும் பொருட்டு, இலங்கை மத்திய வங்கி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் (இதனகத்துப் பின்னர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் பின்வரும் சலுகைகளை வழங்குமாறு (இதனகத்துப் பின்னர் திட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) கோருகின்றது.

மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் அவர்களின் கோரிக்கையின் மீது இத்திட்டத்தில் வழங்கப்பட்டவற்றிலும் பார்க்க கூடுதலான சலுகைகளை வழங்கலாம். இதற்கமைய, இச்சுற்றறிக்கையானது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் கடன்பாட்டாளர்கள் அவர்களது கடனைச் சரியாக மீளச் செலுத்துவதில் அவர்கள் மீது காணப்படும் சுமையினை தளர்த்தும் நோக்குடன் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் பாதிக்கப்பட்ட அனைத்துக் கடன்பாட்டாளர்களுக்கும் ஒரே மாதிரியான தன்மையில் சலுகைகளை வழங்குவதற்காக விடுக்கப்படுகிறது.

**1. தகைமையுடைய கடன்பாட்டாளர்கள்**

1.1 கொவிட்-19இன் காரணமாக வருமானம்/ சம்பளங்கள் அல்லது விற்பனைகளில் ஏற்பட்ட இழப்பு அல்லது குறைப்பு, வியாபாரம் மூடப்பட்டமை அல்லது தொழில் இழப்பு போன்றவற்றினால் நிதியியல் இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்ற வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் கடன்பாட்டாளரொருவர் இச்சலுகைகளைப் பெறத் தகுதியுடையவராக இருப்பார்.

1.2 2021ஆம் ஆண்டின் சுற்றறிக்கை இல.04 மற்றும் இல.05இன் கீழ் சலுகைகளைப் பெற்றுள்ள போக்குவரத்து மற்றும் சுற்றுலாத் துறைகளின் தகைமையுடைய கடன்பாட்டாளர்களும் இத்திட்டத்தின் கீழ் சலுகைகளைப் பெறத் தகைமையுடையவர்களாவர்.

**2. தகைமையுடைய சலுகைகள்**

2.1 இத்திட்டத்தின் கீழ் சலுகைகளைப் பெற விரும்பும் தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் கீழே தரப்பட்டுள்ள மூன்று தேர்வுகளில் ஒன்றைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

**(i) தேர்வு 01: கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல்**

(அ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் இருதரப்பினர்களினாலும் இணங்கிக் கொள்ளப்பட்ட ஏற்றுக்கொள்ளத்தக்க புத்துயிரளித்தல் திட்டத்தினையும் பரிசீலனையில் கொண்டு நீண்டதொரு காலப்பகுதிக்கு (2021 ஒத்தோபர் 01இல் உள்ளவாறு செயற்படுகின்ற மற்றும் செயற்படாத) தற்போதுள்ள கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல் வேண்டும்.

(ஆ) மேலேயுள்ள 2.1(i)(அ) இற்கு ஏற்புடைத்தான வட்டி வீதமானது ஆண்டிற்கு 11.5 சதவீதமான கீழ் வீதம் மற்றும் ஆண்டொன்றிற்கு 15 சதவீதம் கொண்ட உச்ச வீதம் என்பனவற்றிற்குட்பட்டு ஆண்டிற்கு 3 சதவீதத்தினைக் கழித்த ஆரம்ப ஒப்பந்த ரீதியான வட்டி வீதமாக இருத்தல் வேண்டும்.

(இ) மறுசீரமைக்கப்பட்ட நியதிகளுக்கிணங்க, தவணைப் பணத்தின் மூலதனப் பங்கினை மீளச் செலுத்தத் தொடங்குவதற்கு குறைந்தபட்சம் 3 மாத சலுகைக் காலத்தினை வழங்குதல் வேண்டும்.

(ஈ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் முன்னைய சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய தொகையினை (அதாவது மூலதனம், வட்டி மற்றும் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த மேலதிக சலுகை வட்டி) மறுசீரமைப்புக் காலப்பகுதியில் வெளிநின்ற மீதி மூலதனத்துடன் ஒன்றுசேர்த்துக் கொள்ளலாம்.

(உ) இணங்கிக் கொள்ளப்பட்ட நியதிகளின்படி மீளச்செலுத்த இயலாமல் போன தவணைப் பணத்தின் மீது விதிக்கப்பட்ட மேலதிக வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 2 சதவீதத்தினை விஞ்சக்கூடாது என்பதுடன் நிலுவையிலுள்ள தொகையின் மீது மட்டுமே விதிக்கப்படுதலும் வேண்டும்.

(ஊ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 2020 ஏப்பிறல் 01இலிருந்து 2021 செத்தெம்பர் 30 வரையான காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த அல்லது விதிக்கப்பட்ட தண்ட வட்டி வீதங்களைத் தள்ளுபடி செய்தல் வேண்டும்.

**(ii) தேர்வு 02: உரிய காலத்திற்கு முன்னரான தீர்ப்பனவிற்கு வசதியளித்தல்**

தகைமையுடைய கடன்பாட்டாளரொருவர் தற்போதுள்ள கொடுகடன் வசதிகளை 2022 மாச்சு 31 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ தீர்ப்பனவு செய்ய விரும்புவாராயின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் எதிர்கால வட்டி, கட்டணம் மற்றும் ஏற்புடைத்தான விதிப்புக்களை முழுமையாக தள்ளுபடி செய்தல் வேண்டும்.

**(iii) தேர்வு 03: 2021 ஒத்தோபர் 01ஆம் நாளில் உள்ளவாறான செயற்படுகின்ற கொடுகடன் வசதிகளுக்கான சட்ட இசைவுத்தாமதத்தினை நீடித்தல்**

(அ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மூலதனம், வட்டி அல்லது இரண்டினதும் அறவிடல்களை 2022 மாச்சு 31 வரை பிற்போடுதல் வேண்டும்.

(ஆ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய மூலதனத்தினையும் வட்டியையும் தவணைக் கடனொன்றிற்கு மாற்றுதல் வேண்டும்.

(இ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் முன்னைய சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் செலுத்த வேண்டிய தொகைகளை (அதாவது சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியின் மூலதனம், வட்டி மற்றும் மேலதிக ஒன்றுசேர்ந்த சலுகை வட்டி வீதங்கள்) ஒன்றுசேர்க்கலாம் என்பதுடன் மேலே 2.1 (iii)(ஆ)இல் குறிப்பிடப்பட்ட தவணைக் கடனைப் புதிய கடனொன்றிற்கு மாற்றுதலும் வேண்டும்.

(ஈ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் புதிய கடனின் மீது ஆண்டொன்றிற்கு 11.5 சதவீதத்தினை விஞ்சாத வட்டி வீதமொன்றினை விதிக்கலாம்.

(உ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேலே 2.1(iii)(இ)இல் குறிப்பிடப்பட்ட புதிய கடனை, 2022 யூலை 01 இலிருந்து குறைந்தபட்சம் 12 மாதங்களைக் கொண்ட மீள்கொடுப்பனவு காலப்பகுதியுடன் அறவிடத் தொடங்கலாம்.

(ஊ) கடன்பாட்டாளர் ஆரம்பக் கடன் தவணைத் தொகையின் மீள்கொடுப்பனவினை 2022 ஏப்பிறல் 01 இலிருந்து தொடங்குதல் வேண்டும்.

(எ) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் சுழலும் கொடுகடன் வசதிகள் செலுத்தப்பட வேண்டிய திகதிகள், 2021 ஒத்தோபர் 01 இலிருந்து 2022 மாச்சு 31 வரையான காலப்பகுதிக்குள் வருமாயின் அவற்றை 2022 மாச்சு 31 வரை நீடிக்கலாம்.

(ஏ) சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் தண்ட வட்டி ஒன்றுசேர்க்கப்படவோ விதிக்கப்படவோ கூடாது.

2.2 **அறவிடல் நடவடிக்கைகளை இடைநிறுத்துதல்:** வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் தகைமையுடைய கடன்பாட்டாளர்களின் அத்தகைய கொடுகடன் வசதிகள் 2020 ஏப்பிறல் 01 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்பட்டிருந்து, தொடர்பான கடன்பாட்டாளர்களின் வழமையான வருமானமீட்டும் நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஏற்பட்டமையின் காரணமாக, கடன்களைத் தொடர்ந்தும் செலுத்த/ உடனடியாக கடன்களின் மீள்கொடுப்பனவினை ஆரம்பிக்கும் நிலையில் இல்லாது இருப்பார்களாயின் கொடுகடன் வசதிகளுக்கெதிரான அனைத்து வகை அறவிடல் நடவடிக்கைகளையும் 2022 மாச்சு 31 வரை இடைநிறுத்துதல் வேண்டும்.

**3. இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிக்கையிடுதல்**

3.1 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் தகைமையுடைய கடன்பாட்டாளரிடமிருந்தான கடன் விண்ணப்பங்களை கொடுகடன் தகவல் பணியகத்தின் மோசமான பதிவேடுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நிராகரிக்கக்கூடாது.

3.2 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், கொடுகடன் தகவல் பணியகத்தின் ஆலோசனையுடன் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சட்ட இசைவுத்தாமதம்/ மறுசீரமைத்தல் அறிக்கை தொடர்பில் அறிக்கையிடுகின்ற மாதிரியொன்றினைத் தயாரித்தல் வேண்டும். இதன் மூலம் இத்திட்டத்தில் பங்கேற்பது எதிர்காலத்தில் கடன்பாட்டாளரின் கொடுகடன் மதிப்பெண்ணின் மீது தாக்கத்தினையோ அல்லது கொடுகடன் தகவல் பணியகத்தின் எதிர்கால அறிக்கைகள் எதிர்மறையான தன்மையினையோ பிரதிபலிக்கமாட்டாது.

4. கோரிக்கைகளையும் மேன்முறையீட்டு மனுக்களையும் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி

4.1 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களும் இச்சுற்றறிக்கையினை அனைத்துக் கிளைகளுக்கும் 3 வேலை நாட்களுக்கிடையில் சுற்றோட்டப்படுத்தல் வேண்டுமென்பதுடன் தேவையான உள்ளக வழிகாட்டல்கள்/ சுற்றறிக்கைகளை 7 நாட்களுக்குள் வழங்குதலும் வேண்டும்.

4.2 மேலேயுள்ள தேர்வு 01 மற்றும் தேர்வு 03இன் கீழ் சலுகைகளைப் பெற விரும்புகின்ற தகைமையுடைய கடன்பாட்டாளர்கள், மேற்குறிப்பிட்ட சலுகைகளுக்காக 2021 நவெம்பர் 01 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ எழுத்தில் அல்லது இலத்திரனியல் ஊடகமூடாக விண்ணப்பித்தல் வேண்டும். வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அனைத்து தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கும் மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி சேவை உட்பட அச்சு அத்துடன்/ அல்லது இலத்திரனியல் ஊடாக சலுகைகள், இறுதித் திகதி மற்றும் சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவம் என்பன பற்றி விரைவாக தொடர்பூட்டுதல் வேண்டும்.

4.3 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 2021 நவெம்பர் 01 இற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகளை, அத்தகைய கோரிக்கைகள் தாமதமாக செய்யப்படுவதற்கான காரணங்கள் ஏற்றுக்கொள்ளதாக இருப்பின் அவற்றை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

4.4 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், ஒப்புதலுக்கு முன்னதாக, கொடுகடன் வசதிகளின் சட்ட இசைவுத்தாமதம் அல்லது மறுசீரமைத்தல் அமைப்பு தொடர்பில் கடன்பாட்டாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

4.5 கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவது தொடர்பில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் எழுத்து மூலம் அல்லது இலத்திரனியல் ஊடாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன் நிராகரிப்பதற்கான காரணங்களையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

4.6 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய நிராகரிப்பிற்கெதிராக பணிப்பாளர், நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் இலங்கை மத்திய வங்கிக்கு மீளாய்வு செய்யுமாறு கோரிக்கை விடுப்பதற்கான தேர்வு காணப்படுவது பற்றி வாடிக்கையாளருக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

5. சட்ட இசைவுத்தாமதம் தொடர்பான கணக்கீட்டுப் பரிசீலனைகள்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சலுகைகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் 2020 திசெம்பர் 31 திகதியிடப்பட்ட கடிதத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மேலதிக வழிகாட்டல்களுக்கு இணங்கவும் கணக்கிடல் வேண்டும். இடர்நேர்வுகளை அதிகரிக்கின்ற கடன்பாட்டாளர்கள் அல்லது துறைகளைப் பொறுத்தவரை, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் போதுமான பழுதுறும் கட்டணங்களை விதிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகின்றன. இது தொடர்பில் மேலதிக வழிகாட்டல்/ தெளிவுபடுத்தல்களுக்கு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் மற்றும் கணக்காய்வாளர்களிடமிருந்து மதியுரைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

6. அறிக்கையிடும் தேவைப்பாடு

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் கடன்பாட்டாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சலுகைகளின் விபரங்களை ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதியிலுள்ளவாறு 2021 நவெம்பர் 30ஆம் நாளிலிருந்து தொடங்குகின்ற 15 வேலை நாட்களுக்குள், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடல் வேண்டும். அறிக்கையிடுகின்ற படிவம் காலக்கிரமத்தில் சுற்றோட்டப்படுத்தப்படும்.

நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்

*நாணயச் சபையின் தலைவரும்*

*இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்*